Dean of Students ... 2015

## ஆதிதிராவிடர் நலத்துறை

31 DEC 2014
CHENNAI
V.C.
R.
D.R.
A.R.
S.O.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சு.சிவசண்முக ராஜா, இ.ஆ.ப,<br>இயக்குநர்,<br>ஆதிதிராவிடர் நலத்துறை,<br>சேப்பாக்கம், சென்னை 05 | முதல்வர்,<br>இணைப்பில் கண்டுள்ளபடி, |

00490

ந.க.எண் ஜே2 / 33100 / 2014 நாள் 23 . 12 . 2014

அய்யா / அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் – 2014–2015 ஆம் கல்வியாண்டு – முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ/ மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் – தொடர்பாக

பார்வை:
1) அரசாணை நிலை எண் 71 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை நாள் 07.10.2013
2)அரசாணை நிலை எண் 5 ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை நாள் 29.01.2014
3) இவ்வலுவலக ந.க.எண் ஜே2/33100/2014 நாள் 02.12.2014

------

பார்வை 1 இல் காணும் அரசாணையில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 2 இல் காணும் அரசாணையில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3 இல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் 12.12.2014 தினசரி நாளிதழ்களான தினத்தந்தி மற்றும் Indian Express நாளேடுகளில் முழு நேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/ மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும் என விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே தாங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கல்லூரிகளின் முதல்வர்களுக்கு சுற்றறிக்கை மூலம் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்கள் 31.01.2015 க்குள் தங்களது விண்ணப்பப் படிவத்தினை

தட்டச்சு செய்தும், எவ்வித கலமும் விடுபடாமல் பூர்த்தி செய்தும், மாணவரின் மின்னஞ்சல் முகவரியுடன் அனைத்து சான்றிதழ்களையும் இணைத்து இவ்வலுவலகத்திற்கு ( இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை 05 என்ற முகவரிக்கு) அனுப்பி வைக்குமாறு சுற்றறிக்கை மூலமும், அவரவரது கல்லூரிகளில் அனைத்து மாணாக்கர்களும் அறியும் வண்ணம் விளம்பரப் பலகையில் ஒட்டிவைக்க அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் 31.01.2015 ஆம் தேதிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு பெறப்படும் விண்ணப்பப் படிவம் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனவும், **ஊக்கத் தொகைக்கான விண்ணப்பப் படிவத்தில் ஏதேனும் ஒரு கலம் பூர்த்தி செய்யப்படாமல் விடுபட்டிருந்தாலும், இதர சான்றுகள் ஏதேனும் இணைக்காமல் விடுபட்டிருந்தாலும், பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது** (விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்) என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தாங்கள் தங்களது அலுவலக விளம்பர பலகையில் மேற்படி செய்தியினை வெளியிடவும், தங்களது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் மேற்படி விபரத்தினை தெரிவிக்கவும், தெரிவிக்கப்பட்டதற்கான ஒப்புதலை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநருக்காக

24/12/14